LAKSALA
All of Sri Lanka

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

**இலங்கை கைப்பணிகள் அமைச்சு**

**லக்சல**

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை கைப்பணிகள் சபையானது – லக்சல – சுயமாக நிதியிடப்பட்ட வர்த்தக அமைப்பொன்றாகவும் கிராமிய கைப்பணியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு புத்தாக்க உற்பத்திகளை வெளிக்கொண்டுவருவதற்கும் அதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் அமைப்பாகவும் திகழ்கின்றது.

## 1. பிரதம உள்ளக கணக்காளர்

**பொருத்தமான அபேட்சகர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

**வெளிவாரி அபேட்சகர்கள்:- (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி முகாமைத்துவம், கணக்கியல், வர்த்தகம், கணக்கியல் மற்றும் வியாபார நிதி, வியாபார நிர்வாகத்தில் ஓர் இளமாணிப்பட்டம்

   **அத்துடன்**

   பொது நிதி முகாமைத்துவம்/கணக்கியல்/நிதியியலில் முதுமாணிப்பட்டம் அல்லது இலங்கைப்பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் அல்லது பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனம்/பட்டய கணக்கியல் சான்றிதழ் சங்கத்தின் இணை அங்கத்துவம்.

   **மற்றும்**

   ஓர் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் ஓர் “முகாமைத்துவ தரத்தில்” குறைந்தபட்சம் 15 வருட அனுபவம்.
2. பதவியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தில் முழுமையான அங்கத்துவம்

   **மற்றும்**

   ஓர் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் ஓர் “முகாமைத்துவ தரத்தில்” குறைந்தபட்சம் 15 வருட அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:- (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளிவாரி அபேட்சகர்களினால் தேவைப்படுத்தப்படும் கல்விசார் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு உரித்தான பாடப் பரப்பில் 1ஆம் தர முகாமைத்துவ வகுதியிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## 2. காட்சியறை முகாமையாளர்

**பொருத்தமான அபேட்சகர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

**வெளிவாரி அபேட்சகர்கள்:- (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வர்த்தகம் அல்லது வியாபார முகாமைத்துவத்தில் பெற்றவொரு பட்டம்.
2. சந்தைப்படுத்தல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி.

**உள்ளக எஅபேட்சகர்கள்:- (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு உரித்தான பாடப் பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியில் (ஜேஎம் 1.1) பதவியொன்றில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
3. பதவிக்கு உரித்தான பாடப் பரப்பில் II ஆம் தர முகாமைத்துவ உதவியாளர் வகுதிப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## 3. உதவியாளர்/காட்சியறை உதவி முகாமையாளர்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், வர்த்தகம் ஆகியவற்றில் பெற்ற பட்டமொன்று.
2. சந்தைப்படுத்தலில் கற்கைநெறியொன்றை பூர்த்தி செய்திருத்தலுடன் சந்தைப்படுத்தல்

   பட்டய நிறுவனம், ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் நிறுவனம் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று.

**உள்ளக அபேட்சகர்கள்:- (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ள வெளிவாரி அபேட்சகர்களினால் தேவைப்படுத்தப்படும் கல்விசார் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு உரித்தான பாடப் பரப்பில் II ஆம் தர முகாமைத்துவ உதவியாளர் வகுதிப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## 4. விற்பனை ஊக்குவித்தல் அலுவலர்

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

**கல்விசார் தகைமைகள்:**

நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் பின்வரும் நான்கு பாடங்கள் அடங்கலாக ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

**மற்றும்**

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பொது வினாத்தாள் நீங்கலாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**உள்வாரி அபேட்சகர்கள்:**

பின்வரும் தகைமைகளையுடைய பயிற்சியுள்ள ஆரம்ப மட்ட, பயிற்சியற்ற ஆரம்ப மட்ட வகுதிகளின் 5 வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்த ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.

நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் பின்வரும் நான்கு பாடங்கள் அடங்கலாக ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

**நியமனத்தின் தன்மை:**

ஒப்பந்த அடிப்படையிலும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கும் உரித்துடையவராவர்.

சம்பளம்: பேசித்தீர்க்கலாம்.

**ஏனைய உரித்துக்கள் :** வாழ்க்கைச் செலவுப் படி/ போக்குவரத்துப் படி/ஊக்குவிப்பு

**வயது:**

**பிரதான உள்வாரி கணக்காய்வாளர்:**

வயதானது 35 இற்கு குறையாமலும் 55 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லை உள்வாரி அபேட்சகர்களுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

காட்சியறை முகாமையாளர் உதவியாளர்/ காட்சியறை பிரதி முகாமையாளர் மற்றும் விற்பனைகள் ஊக்குவித்தல் அலுவலர்.

வயதானது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லை உள்வாரி அபேட்சகர்களுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- இலங்கைப் பிரஜையொருவராகவிருத்தல்.
- பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கான உடல், உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- மிகச்சிறந்த நன்னடத்தையுடையவராகவுமிருத்தல்.

காலி, பதுளை மற்றும் எல்ல பிரதேசங்களின் பதிவாளர்கள் மேற்படி 2, 3, 4 பதவிகளுக்கு மிகவும் பொருத்தமானவர்களாக இருப்பர்.

அனைத்து ஆட்சேர்ப்புக்களும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு தீவிர அமைந்தொழுகல் அடிப்படையில் அமைந்திருக்கும்.

விபரமான சுயதரவு மற்றும் இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்கள் ஆகியவற்றை அடக்கியுள்ள விண்ணப்பங்கள் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுள் hr@laksala.gov.lk என்ற முகவரிக்கு விடய வரிசையில் பதவிப் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பத்தை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயரும் குறித்துரைக்கப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் அறிவிக்கப்படுவார்கள்.

**ஆளனி மற்றும் நிர்வாகப் பிரிவு**
**இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல,**
**இல.: 215, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**